**சாட்சிகளின் வாக்குமூலம்.**

பாகம் III சற்றறிக்கை உத்தரவு 2 ( I) உ.வி.மு.ச. பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி.

**அசல் வழக்கு எண்.107/2012**

வாக்குமூலம் - **வா.சா.1** தொடங்கும் நேரம் : 01.12 p.m.

முடிவுறும் நேரம் : 01.19 p.m.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **ஜனார்த்தனன்** | மதம் | : | -- |
| த/பெ. | : | **சகாதேவன்** | தொழில் | : | **விவசாயம்** |
| கிராமம் | : | **ஒசூர்** | வயது | : | **36** |
| தாலுக்கா | : | **வந்தவாசி** | நாள் | : | **26-09-2025** |

1987ஆம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **26**ஆம் நாள் சாட்சியம்.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 6ஆம் வாதியாவேன். எனது முதல் விசாரணைக்காக சாட்சிய சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. கீழ்கண்ட ஆவணங்கள் என் தரப்பில் தாக்கல் செய்யப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **01.** | **24.07.2012** | **தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் - அசல்** | **வா.த.சா.ஆ.1.** |
| **02.** | **25.06.2012** | **தேதியிட்ட சகாதேவன் மற்றும் இருவர் பெயரில் உள்ள வந்தவாசி துணை வட்டாட்சியர் வழங்கிய பட்டா. (பட்டா எண்.654) - உண்மை நகல்.** | **வா.த.சா.ஆ.2.** |
| **03.** | **31.01.2000** | **தேதியிட்ட கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்.** | **வா.த.சா.ஆ.3.** |

மேற்படி **வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.3** வரையிலான ஆவணங்கள் என் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றன. **வா.த.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் பிரதிவாதியின் வசம் உள்ளதாலும் வா.த.சா.ஆ.2 ஆவணம் உண்மை நகல் மற்றும் வா.த.சா.ஆ.3 ஆவணம் சான்றிட்ட நகல்**

**என்பதாலும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுங்கிணங்க ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது.** தாவாப்படி தீர்ப்பாகும்படி வேண்டிக் கொள்கிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**.

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.